# நெடுநல்வாடையில் கலைகள்

# Arts in Nedunalvaadai

***வி. பிரிட்டா ஜாஸ்மின்***
இணைப்பேராசிரியர், தலைவர்
தமிழ்த்துறை
த.பே.மாலு கல்லூரி, பொறையார், இந்தியா

**Dr. V. Breeta Jasmine**
*Associate Professor & Head*
*Department of Tamil*
*TBML College, Porayar, India*

**Citation**: Breeta Jasmine, V. "Arts in Nedunalvaadai." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 3, 2025, pp. 7-15.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20053730*

*ஆய்வுச் சுருக்கம்*
*சங்க இலக்கியம் உலகமாட்சிமை கொண்டது. இரண்டாயிரம் ஆண்டு பழமையுடையதாகவும் காலத்தை வென்று நிற்கும் செவ்விலக்கியமாகவும் திகழ்கிறது. தமிழின் தொன்மையையும், சிறப்பையும் சங்க இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றது நெடுநல்வாடையில் கலைகள் என்ற தலைப்பிலான ஆய்வுக் கட்டுரையில் முன்னுரை, கலை விளக்கம், கட்டடக்கலை, தச்சுக்கலை, அரண்மனையில் மழைநீர் சேகரிப்பு, சிற்பக்கலை, அந்தப்புர முகப்புத் தொழில் நுட்பம், பாண்டிமாதேவியின் கட்டில் வேலைப்பாடு, ஓவியக்கலை ஆகிய துணைத் தலைப்புகளில் ஆராயப்பட்டுள்ளது. கட்டுரையின் நிறைவாக முடிவுரை வழங்கப்பட்டுள்ளது.*
***முக்கியச் சொற்கள்:*** *கலைகள், சிற்பக்கலை, கட்டடக்கலை, தச்சுக் கலை ஓவியக்கலை*

## Abstract

*Sangam literature holds global significance and has a rich heritage of over two thousand years, standing as a classical literary masterpiece that has withstood the test of time. It provides profound insights into the antiquity and excellence of the Tamil language. This research article, titled Arts in Nedunalvaadai, explores various aspects such as an introduction, definition of art, architecture, carpentry, rainwater harvesting in palaces, sculpture, technical aspects of palace facades, the craftsmanship of Queen Pandimadevi's bed, and painting. The article concludes with a summary of the findings.*
***Keywords***: *Arts, Sculpture, Architecture, Carpentry, Painting*

### முன்னுரை

இலக்கியம் என்பது மனிதனின் அகத்தையும், புறத்தையும் விளக்கும் அறிவுக் கருவியாகும். சங்ககால மக்களின் வாழ்வியல் நிலைகளை ஓவியம் போல எடுத்துரைக்கவல்லன பாட்டும் தொகையும். பத்துப்பாட்டு நூல்களுள் பழமை வாய்ந்த நூலாகக் கருதப்படும் நெடுநல்வாடை சங்க கால மக்களின் வாழ்வியல் முறைகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள், தொழில்கள், கலைகள் என தமிழரின் உன்னதமான வரலாற்றுப் பண்பாட்டு நிகழ்வுகளைச் சிறப்புற எடுத்துக்காட்டுகிறது. கலை என்பது கற்பனையின் அடிப்படையில் தோன்றுவது. அறிவு, ஊக்கம், செயல்திறம் ஆகியவற்றை ஒருமுகப்படுத்துவதாக விளங்குகிறது.

கலை காலத்துக்கு ஏற்ப மாறுபடும் தன்மையைப் பெற்றுச் சமுகத்தைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. அந்த வகையில் நெடுநல் வாடையில் இடம்பெறும் கலைகள் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின்நோக்கமாகும்.

**கலை - விளக்கம்**

*கலைகளுக்கெல்லாம் தெய்வமாக விளங்கும் கடவுள் கலைமகள் என்றும் ஆய கலைகள் அறுபத்தி நான்கினையும் அருளினாள் என்பதையும் கம்பர்குறிப்பிடுவதை,*

***ஆய கலை களறுபத்துநான்கினையும்***
***ஏய வுணர் விக்கு மென்னம்மை தூய***
***உருப்பளிங்கு போல்வாளென்னுள்ளத்தி னுள்ளே***
***இருப்பளிங்கு வாரா திடர்***[1]

*என்ற பாடலின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.*

*"கலை என்னும் சொல் கல் என்னும் வேர்ச்சொல் 'ஐ' என்னும் தொழிற்பெயர் மிகுதியோடு சேர்ந்து தொழிற்பெயராக அமைந்துள்ளது. ஆகையால் உள்ளத்தில் ஆழமாக பதிந்துள்ள அழகுணர்வுகளை அகழ்ந்து எடுத்து வெளிப்படுத்துவதாக கலை அமைகிறது*[2] *என்று கூறுகிறார். இதனையே தொல்காப்பியம்,*

***கலைஎன் காட்சி உழைக்கும் உரித்தே***[3]

*என்ற நூற்பா மூலம் உரைக்கிறது. கலை என்னும் சொல் மரபின் வழிபட்டது. என்பதை,*

***"எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர்***
***செப்பினர் அப்படிச் செப்புதல் மரபு"***[4]

*என்ற நூற்பா வழி அறியலாம். அதாவது கலை என்பது மரபு வழியாக காலம் காலமாக நம் தமிழர்களிடையே பரவி வந்துள்ளது என்பதை மேற்கூறிய நூற்பாக்கள் உணர்த்துகின்றன.*

*இக்கலையானது இன்று நாம் கருதி வருகின்ற நாடகம், சங்கீதம், இசைக்கருவி வாசித்தல் முதலிய தொழில்களை மட்டும் குறிக்கவில்லை வடமொழி நூல்களில் அறுபத்து நான்கு வகையானக் கலைகளைச் சுட்டிச் செல்கின்றன. அதில் நாம் செய்யும் ஒவ்வொரு தொழிலுமே கலை நுட்பம் உடையது. பொதுவாக கலை என்பது கற்றுக் கொள்வதாகும். கற்றுக்கொண்டு செய்யும் தொழில்கள் அனைத்துமே கலை என்று அழைக்கப்படுகிறது*

*'படித்தறிந்தோ, படிக்காமல் கண்ணாற் பார்த்து, உள்ளத்தால் உணர்த்து கையால் செய்யக் கற்றுக் கொண்டோ, இயற்றப்படும் தொழில்கள் எல்லாம் கலைகள்"*[5]
*என்று சிதம்பரனார் குறிப்பிடுகிறார்.*

**கட்டடக்கலை**

*ஒரு சமுதாயத்தில் நாகரிகத்தை அறிந்து கொள்ள அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள் உதவியாக அமைகின்றன. மக்களின் அறிவையும் உணர்ச்சியும் அவை வெளிப்படுத்துகின்றன. நெடுநல்வாடையில் அறிவியல் தொடர்புடைய தொழில்நுட்ப முறைகள் பின்பற்றப்பட்டுள்ளன என்பதையும் அறியமுடிகின்றது. கட்டிடத்தை வடிவமைக்கக் கூடிய கலையே கட்டிடக்கலை எனப்படும். கட்டிடத்தின் முக்கிய அங்கமாகத் திகழ்வது கூரை, வளைவுகள், கவர்கள், கதவுகள் மற்றும் ஜன்னல்கள் ஆகும். ஆர்கிடெக்சர் என்றவார்த்தை 'ஆர்க்' என்ற வார்த்தையிலிருந்து தோன்றியது "ஆர்க்" என்றால் வளைவு அல்லது வளைவான நுழைவாயில் எனப்படும். பழங்காலத்தில் உயர்ந்த பாதுகாப்பான மதில் இருந்தன என்பதை,*

***"முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்"***[6]

*என்ற நூற்பா விளக்குகிறது. அதாவது எல்லா பாதுகாப்பும் இந்த கோட்டை சுவரை முற்றுகையிடுவதும் கைப்பற்றுவதும் என்பதன்வழி கோட்டைச் சுவரின் மேல் பகைவர்களை எதிர்க்கக்கூடிய படைகளும், இயந்திரங்களும் அமைக்கப்பட்டு இருந்தன என்பதை உணரலாம். நகரத்தின் கோட்டை வாசல்கள் பெரியதாகவும் அவ்வாசல்களுக்கு வன்மையான கதவுகளும்*

*யானை முதலியவை அம்பாரியுடன் புகுந்து செல்லும்படியான அகன்ற உயரமான வாரல்களும் கொண்ட கோட்டை வாயில்கள் இருந்தன என்பதை,*

***“தாழொடு குயின்ற போர் அமை புணர்ப்பின்***
***கைவல் கம்மியன் முடுக்கலின் புரைதீர்ந்து***
***ஐயவி அப்பிய நெய்அணி நெடுநிலை***
***வென்றுஎழு கொடியோடு வேழம் சென்றுபுகக்***
***குன்றுகுயின்று அன்ன ஓங்குநிலை வாசல்”[7]***

*என்ற பாடல் வரிகள் ஆழமான அகழி, உயர்ந்த மதில்கள், தாழ்போடும்படி வேலைத்திறம் மிகுந்த கதவுகள், உயர்ந்த வாசல்கள், யானைகள் செல்வதற்கான இடப்பாங்குடன் கூடிய அகன்ற வாசல்கள் போன்ற அமைப்புள்ள கட்டடங்கள் இருந்ததைக் காணமுடிகின்றது. மேலும் இக்கட்டடங்களை அமைக்க இன்று பார்ப்பது போன்று நல்லநாள், நட்சத்திரம் போன்றவை அன்றைய காலங்களிலும் இருந்துள்ளது. அன்றைய கோவில்களைக் கட்டவும், அரண்மனைகளை அமைக்கவும் நூலறிப்புலவர் என்று கூறப்பட்ட கட்டிடக்கலை அறிஞர் இருந்தனர். அத்தகையோர் கட்டடங்களை அமைக்கும் பொழுது நாள்குறித்து. திசைகளையும் அவற்றில் உள்ள தெய்வங்களையும் நோக்கி அமைத்தனர் என்பதை அறிந்து கொள்ளமுடிகின்றது. மேலும் இது குறித்து நூல்கள் அன்றைய காலத்தில் இருந்தது என்பதை,*

***உயர்வகலத் திண்மை அருமையின் நான்கின்***
***அமைவரண் என்றுரைக்கும் நூல்[8]***

*என்ற குறள் மூலம் உணரலாம் மேலும், அரசர்களின் உறைவிடம் அரண்மனை என்பதை.*

***வரைகண் டன்ன தோன்றல வரைசேர்பு***
***வில்கிடந்தன்ன கொடிய பல்வயின்***
***வெள்ளிஅன்ன விளங்கும் சுதைஉரீஇ***
***மணிகண் டன்ன மாந்திரள் திண்காழ்ச்***
***செம்புஇயன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்[9]***

*என்ற பாடலடிகளின் மூலமாக அரசனின் அரண்மனையினைச் சித்தரித்துள்ளனர். அதாவது மலைகளைப் போல உயர்ந்ததாகவும், அதன் மீது இந்திரனின் ஒளி விடுவதைப் போலவும், வெள்ளியைப் போன்று சுண்ணாம்பு பூசப்பட்டிருந்ததையும். கருங்கல் தூண்கள் கருமை திராட்சையும் கொண்டதாக விளங்குகின்றன என்று கூறுவதன் மூலம் அறிய முடிகின்றது.*

*இந்திய கட்டிடக்கலையின் சிறப்பைநோக்கும் போது கட்டிடக்கலைத் தொடர்புடைய இலக்கண நூல்கள் இருந்துள்ளன என்பதை.*

*இந்திய அறிஞர்களாலே வடமொழியில் எழுதப்பட்டவை. இவற்றை சிற்ப நூல்கள் வாஸ்து நூல்கள் அல்லது சாஸ்திர நூல்கள் என்பர். இவை பலவானாலும் இன்று நமக்குக் சிலவே. கிடைத்துள்ளது. அவை யாவனமானசாரம், மயமதம், விஸ்வர்மீயம், ஐந்திரமதம், மனுசாரம், காஸ்யபம் இவை சிற்பக்கலை, கட்டிடக்கலை ஆகிய இரண்டையும் பற்றிப் பேசும் வாஸ்து நூல்கள்[10] என்று கட்டிடக்கலை இலக்கணமுறைகள் குறித்து நூல்கள் உள்ளன என்பதை உணர்த்துகின்றது. வரலாற்று அடிப்படையிலான ஆய்வுகளோடு இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளக்கருத்துக்களையும் ஒப்பிட்டுநோக்கும் போது. கலை வளர்ச்சிக்கு சங்க காலமக்கள் எத்தகைய முக்கியத்துவம் தந்துள்ளனர் என்பதை அறிந்து கொள்ளமுடிகின்றது. அதுபோல கோபுர வாயில்கள் வளைந்த உயர்ந்த நிலைகளைக் கொண்டது என்று கூறும் போது தமிழக கட்டிடக் கலையில் பழமையான முறைகள் இன்றைய கட்டிடக் கலைஞர்களாலும் பின்பற்றப்பட்டு வருவதை அறிந்து கொள்ள முடிகின்றது. இவை மூலம் நேர்த்தியான தொழில்*

*நுட்பக் கூறுகள் சங்ககால மக்களால் பின்பற்றப்பட்டுள்ளன என்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது.*

**தச்சுக்கலை**

*மனிதன் நாகரிக வளர்ச்சி அடைய புதிய புதிய உத்திமுறைகளை கண்டுபிடித்து அவற்றை உலகிற்கு கொடையாக வழங்கியுள்ளான். அவ்வகையில் தான் வாழும் வாழ்விடத்திற்கு தகுந்ததுபோல இயற்கை தந்தகொடைகளைக் கொண்டு கலைநயம் மிக்க சூழலை உருவாக்கி அதனுடன் தன்னையும் தன்னைச் சார்ந்தோரையும் இணைத்து பழமையில் புதுமையை உருவாக்கத் தலைப்பட்டான். சங்ககாலமக்களில் தலைமை வாய்ந்த மன்னர்களின் சமூகம் எதிரிகளின் தாக்குதலில் இருந்துதன்னைகாத்துக் கொள்ளமிகவும் வலிமையானபோர் கதவுகளை தனது கோபுர வாயிலில் அமைத்திருந்தான். அத்தகைய கோபுரவாயிலின் கதவுகள் பற்றி நெடுநல்வாடையில் ஆணிகள், பட்டங்கள் யாவும் பருத்த இரும்புகளால் பிணிக்கப் பெற்றவையாகவும். அதில் தாழ்ப்பாள்கள் மிகவும் வலிமையானதாகவும் விளங்கின எனச் சுட்டப்படுகின்றது. இவையாவும் கைவல் கம்மியன் என்று கூறப்படும் தச்சுவேலையில் நேர்த்தி உடையவர்களால் செய்யப்பட்டது என்பதை,*

***“ஒருங்கு உடன் வளைஇ ஓங்குகலைவரைப்பின்***
***பரு இரும்புபிணித்துசெல்வரக்குஉரீஇ***
***துணைமான் கதவம் பொருத்தி இணைமாண்டு”*** [11]

*என்ற பாடலடிகள் மூலம் சங்க கால மக்களின் கைத்திறனுடன் சேர்ந்த கலை நயத்தை அரண்மனைக்கு பொருத்தப்பட்ட கதவுகள் உணர்த்துகின்றன. மேலும் இன்று பெரும்பாலான வீடுகளின் நிலைக்களுக்கு மேலே காணலாகும் கஜலெட்சுமி வடிவம் இழைத்த உத்தரம் நெடுநல்வாடையிலே இடம் பெற்றுவிட்டது. உத்திரத்தின் மேலே அதாவது நிலைக்கு மேலே கற்பலகையில் குவளையின் புதிய மலர்களை உயர்த்தித் தங்கள் துதிக்கைகளால் ஏந்தியபிடிகளின் உருவங்களும் அதன் நடுவில் திருமகள் உருவமும் பொறிக்கப்பட்டிருக்கும். இத்தகைய தொழில்நுட்பங்கள் யாவும் சங்ககாலமக்கள் வழங்கிய கொடை என்பது தெளிவாகிறது. மக்களின் பொழுதுபோக்கிற்காக இருந்த கலை இன்று வளர்ச்சியடைந்து தொழில்நுட்பக் கூறுகளில் ஒன்றாகமாறிவிட்டது. சிறந்தகலைக் கூறுகளோடு மனிதர்களால் செய்யப்பட்டதொழில் நுட்பங்கள் யாவும் கணினி உதவியுடன் இன்றைய காலத்தில் உருவாக்கப்படுவதால் கலை நேர்த்தி இன்றி கட்டிடக்கலை. தச்சுக் கலை தரம் மாறிவிட்டது. மேலும் கலைக்கூறுகளை கைகளால் இழைத்துசெய்யப்படும் தரம் குறைந்து அழகியல் நோக்கும் சிதைந்து வரும் அவலநிலையில் தொழில்நுட்பக் கூறுகள் மாறி முடங்கிக்கிடக்கின்றன. நெடுநல்வாடைக்கு உரை வகுத்த நச்சினார்கினியர் கஜலெட்சுமிஉருவம் பொறித்த கற்பலகைக்கு விளக்கம் தரும் போது, “நடுவில் திருமகளும், இருபுறத்தும் இரண்டு செழுங்கழு நீர்ப்பூவும், இரண்டுபிடியுமாக வகுத்த உத்தரக் கற்கலி” என்று அழகுபட உரைக்கின்றார். இத்தகைய காட்சி கலித்தொகையிலும் காணமுடிகின்றது. இதனை,*

***“வரிநுதல் எழில் வேழம் பூ நீர் மேல் சொரிதரப்***
***புரிநெகிழ் தாமரைமலரங்கண் வீறுஎய்தித்***
***திருநயந்து இருந்தன்ன”*** [12]

*என்ற பாடலடிகள் மூலம் அறியலாம். பழங்காலக்கலைகள் நிலைத்த தன்மை உடையன என்பதற்கு இதுவே தக்கச் சான்றாக விளங்குகின்றது.*

**அரண்மனையில் மழைநீர் சேகரிப்பு**

*தமிழகத்தில் நீர் ஆதாரமாக விளங்கும் ஆறுகள், குளங்கள், ஏரிகள் என அனைத்தும் வற்றிக் கிடக்கும் சூழலில் எல்லா வீடுகளிலும் மழைநீர் சேகரிப்பு முறை பின்பற்ற வேண்டும் என்று அரசின் ஆணையை வழி மொழிந்து ஒரு காலகட்டத்தில் மழைநீர் சேகரிப்புத் தொட்டிகள் கட்டப்பட்டன. ஆனால் மழை நீரச் சேகரிப்பை பழந்தமிழகத்தில் அரசனே பின்பற்றி செயல்பட்டிருக்கின்றான். என்பதற்கு ஆதாரமாக நெடுநல்வாடை விளங்குகின்றது.' நிலாமுற்றம்' எனப்படும். நீரை வெளியேற்றும் குழாய் கலைத்திறத்துடன் மகரமீனின் வாய் போல வடிவமைக்கப்பட்டு அதன் வழியே வெளியேறியது. என்பதை,*

***"நிலவுப்பயன் கொள்ளும் நெடுவெண் முற்றத்து***
***கிம்புரிப் பகுவாய் அம்பணம் நிறைய***
***கலித்துவீழ் அருவிப் பாடுவிறந்து அயல்"*[13]**

*என்ற பாடலடிகள் மூலம், மாடங்களில் விழும் நீர் சேமிக்கப்பட்ட செய்தியைக் காண முடிகின்றது. இதே நிகழ்வினை,*

***"நிலவுப்பயன் கொள்ளும் நெடு நிலா முற்றத்து"*[14]**

*என்ற பாடலடி மூலம் மாதவியும் கோவலனும் வீட்டிடத்தே, நிலாவின் முற்றத்தில் இன்பமாக இருந்தனர் என்பதையும் அறிந்துகொள்ள முடிகின்றது.*

**சிற்பக்கலை**

*சிற்பக்கலையின் வளர்ச்சி சேர. சோழ. பாண்டியர் காலங்களில் வளர்ச்சிபெற்றது. இருப்பினும் அதன் தோற்றம் வேதகாலத்திலேயே இருந்துள்ளது என இந்திய சிற்பக்கலை குறித்து ஆராயும் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.நம் தமிழகத்தில் சங்ககாலமன்னர்கள் கடல் தாண்டிபோர்புரிந்தனர்என்பதோடல்லாமல்அங்கிருக்கும்கலைகளை தமிழகத்திற்குக் கொண்டு வந்து கலையைப் போற்றியும் அல்லது பரப்பியும் வந்தனர். இதற்கு யவனர் இயற்றிய வினைமாண் பாவை என்னும் வரி சான்றாகின்றது. யவனநாட்டினர் தங்களின் தொழில் திறம் விளங்குமாறு உருவாக்கிய பாவைகளின் கைகளில் விளக்குகள் ஏந்தியுள்ள காட்சியின் மூலம் தொழில்திறம் என்பது நுட்பமாகச் செய்யப்பட்ட வேலைப்பாடுகள் உடைய பாவை என்பதைப் படிப்போர் உணரும் வகையில் விளங்குகின்றது. அதுபோல இரும்பின் பயன்பாடு இருந்ததை,*

**"இரும்புசெய்விளக்கின் ஈர்ந்திரிக் கொளீஇ"[15]**

*என்ற வரியின் மூலம் மகளிர் மாலைக் காலத்தில் இரும்பால் செய்ப்பட்ட விளக்குகளை ஏற்றி வழிபட்டனர் என்பதை அறிய முடிகின்றது.*

**அந்தப்புர முகப்புத் தொழில்நுட்பம்**

*கட்டிடக்கலையின் கூறுகளில் முக்கியமானது முன்புறத் தோற்ற வேலைப்பாடாகும். மனையாகிலும், பொது கட்டிடங்களாகிலும், கோயிலாகிலும் முன்புறத் தோற்றத்தை வைத்தே அக்கட்டிடத்தின் அழகுத் தன்மையை உணரமுடியும். அந்த வகையில் பாண்டியமன்னனின் மனைவி பாண்டிமாதேவி தங்கி இருக்கும் அந்தப்புரத்தின் முன்புறமதிலின் தோற்றம் கலை நேர்த்தி கொண்டதாக இருந்தது. இதனை,*

***"வரைகண்டன்னமாத்திரள் திண்காழ்***
***செம்பு இயன்றன்னசெய்வுஉறுநெடுஞ்சுவர்***
***உருவப் பல்பூ ஒருகொடி வளைஇ***
***கருவொடுபெயரியகாண்பு இன் நல் இல்"*[16]**

*என்ற பாடலடிகள் மூலம் அந்தப்புரத்தின் உட்பகுதி சாந்து பூசப்பட்டு தூண்களை உடையதாக பல வல்லிசாதியாகிய கொடிகள் எழுதப் பெற்றுஅழகுடன் விளங்குவதாககாட்சியளித்ததுஎன்று அந்தப்புரத்தின் புறத்தோற்றத்தைக் கூறுவதன் மூலம் கட்டமைப்புகளில் சீரான அழகியல் கூறுகள், தொழில்நுட்பகூறுகள்பின்பற்றப்பட்டுள்ளமையை அறியமுடிகின்றது. மேலும்,*

***“செம்பு இயன்றன்ன செஞ்சுவர் புனைந்து”*** [17]

*என்ற பாடலடியின் மூலம் அரண்மணையில் அரியணை இருக்கும் நாளைவையின் பக்கச்சுவர் அரண்மனையில் கமண்டலம் போன்ற உருவ அமைப்புகள் இருந்தன அவை கல்லை ஒளியால் பொளித்து செதுக்கி செய்யப்பட்டிருந்தன. சிமிலி என்னும் புரிசங்கு சிப்பிகளை கோவைகள் செய்யப்பட்டு நாளா பங்கமும் மறைக்கும் திரைகளாக தொங்கவிடப்பட்டிருந்தன. பூத்து கிடக்கும் குளம் போல மானிகையின் அமைப்பு விளங்கிற்று. சுவர் செம்பால் செய்யப்பட்டது போல இளஞ்சிவப்பு வண்ணம்திட்டப்பட்டிருந்தது. அருகில் இருந்து அண்ணாந்து பார்க்க முடியாத அளவுக்கு மேலே உயர்ந்திலிருந்த மாளிகையானது பார்க்கப் பார்க்க வியப்பை உண்டாக்கும் வகையில் அக்காலத்தில் உருவாக்க ப்பட்ட கட்டிடங்கள் இருந்துள்ளது என்பது புலப்படுகின்றது.*

**கட்டிலின் தொழில்நுட்ப கூறுகள்**

*பாண்டிமாதேவி உறங்குவதற்காக செய்யப்பட்ட கட்டிலின் கலை வேலைப்பாடுகள் நெடுநல்வாடையில் சுட்டப்பட்டுள்ளதை நோக்கும் போது 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகமக்களின் வாழ்க்கை முறைகளில் எத்தகைய அருமையான கலைக் கொடை இன்றைய கலைவிரும்பிகளுக்கும், தொழில்நுட்ப வல்லுநர்களுக்கும் கிடைத்துள்ளது என்பதை அறியமுடிகின்றது. பாண்டில் என்று சொல்லப்படும் கட்டில் எப்படி செய்யப்பட்டது என்பதை நெடுநல்வாடை விளக்கும் போது நாற்பதுவயது நிரம்பிய முரசு போன்ற கால்களை உடைய போரில் இறந்த யானையின் தானே விழுந்த தந்தங்களால் செய்யப்பட்டது. தச்சன் தனது கூர்மையான சிறிய உளியால் நுட்பமாகச் செதுக்கிவட்டக் கட்டிலை உருவாக்கினான். மேலும் அதன் இடையில் இலை வடிவங்கள் விளங்குமாறு செய்யப்பட்டது என்று கூறும் போது, நுண்ணிய வேலைப்பாடு உடையகட்டில் அல்லது பாண்டில் செய்ய சிற்றுளி பயன்பாடு மாறவில்லை காலங்கள் மாறினாலும், கலையும், தொழிலும் மாறாதது இதற்குத் தக்கச் ச ான்றாக விளங்குகிறது. கட்டிலின் மேல் சிங்கம் வேட்டையாடுவது போன்ற காட்சி தகடுகளில் பொறிக்கப்பட்டுள்ளது. தூரிகை கொண்டு வண்ணங்களால் சித்திரம் தீட்டுவதைக் காட்டிலும் தகடுகளில் உருவங்கள் பொறிப்பது என்பது கடினமானதாகும் என்றும் கலைத் தன்மை கொண்ட கலைஞர்களுக்கு அது எளிதாகிப் போகின்றது. இதனை,*

***“தசநான்கு எய்திய பணைமருள் நோன்தாள்***
***இகல் மீக் கூறும் ஏந்துஎழில் வரிநுதல்***
***பொழுதுஒழி, நாகம் ஒழிஎயிறுஅருகுஎறிந்து***
***சீரும் செம்மையும் ஒப்பவல்லோன்***
***கூர் உளிக் குயின்றஈர் இலை இடை இடுப்”*** [18]

*என்ற பாடலடிகளின் வழி கட்டிலைத் தச்சன் செய்த முறையைக் கூறியுள்ள செய்தியைக்காண முடிகின்றது. மேலும் பாண்டில் பற்றி மலைப்படுகடாமில்,*

***நுண் உருக்குற்றவிளங்கு அடர்ப்பாண்டில்*** [19]

*என்ற அடியின் மூலம் கூறப்பட்டுள்ளமை நோக்கும் போது பாண்டில் பற்றி சங்க இலக்கியங்களில் சுட்டப்பட்டுள்ளதை மட்டுமே ஆய்வாக எடுத்துக் கொண்டால் கலை இலக்கிய வளர்ச்சியில்*

*பெரும் ஆய்வாக அமையும் என்பதை உணர்ந்து கொள்ளமுடிகின்றது. பாண்டிமாதேவியின் படுக்கை விரிப்பிலும் தொழில்நுட்பத்தை காணமுடிகின்றது. பழங்காலத்தில் பின்பற்றப்பட்ட முறைகள் இன்றுபின்பற்றப்படும் போதுதொழில் நுட்பங்கள் மாறவில்லை. தொழில்நுட்பக் கருவிகளே மாறி உள்ளதை அறியமுடிகின்றது. அன்றைய தொழில்நுட்பக் கூறுகளின் வளர்ச்சியில் மனிதனின் பங்களிப்பு இருந்தது. இன்றைய தொழில்நுட்பக் கூறுகளின் வளர்ச்சியில் கணினியே விஞ்சி நிற்கின்றது என்பதையும் காணமுடிகின்றது.*

**ஓவியக்கலை**

*ஓவியக்கலை என்பது ஒரு சிறந்த கலை. நடந்தேறிய நிகழ்ச்சிகள் வரலாறாக மாற்றப்படுவதற்கு ஓவியக்கலை முக்கியப் பங்கு வகிக்கிறது. கைத்திறம் நுண்ணறிவும் கற்பனைத் திறமையும் உள்ளவர்கள் மட்டுமே சிறந்த ஓவியராக முடியும். ஓவியக்கலையானது கண்ணையும் கருத்தையும் கூறுவதாக திகழும். இக்கலையை மக்களுக்கு நல்லறிவூட்டப் பயன்படுத்தினர் சங்ககால மக்கள். இவ்வோவியமானது சங்க காலத்தில் ஓவு, சித்திரம், ஓவம், ஓவியம் என்னும் சொற்களால் வழங்கப்பட்டுள்ளது. ஓவியத்திற்கென்று தனியாக நூல் இருந்ததை 'ஓவிய செந்நெல் கிடக்கையும்' என்னும் மணிமேகலை அடியானது உணர்த்துகிறது அரண்மனையில் சித்திரம் தீட்டப்பட்ட பகுதிக்கு சித்திர மாடம் என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. சிவந்த நிறத்தில் பூக்களையும் படர்ந்த வள்ளியையும் ஓவியமாக தீட்டப்பட்டு இருந்ததை,*

***"வெள்ளிஅன்னவிளக்கும்கதைஉரீஇ கருவொடுபெயரியகாண்பு இன்நல"[20]***

*என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன. மேலும் இவ்வடிகளில் அழகிய பல மலர்கள் பூத்து கொடிகள் செம்பு போன்ற உறுதியான சுவரில் எழுதப்பட்டிருக்கின்றன என்று விளக்கப்பட்டுள்ளது. தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியனைப் பிரிந்து வருந்தும் தலைவியானவள் வேலைப் பாடுகள் அமைந்த கட்டிலில் இருந்ததை,*

***"புதுவது இயன்ற மெழுகுசெய் படமிசை***
***திண்நிலை மருப்பின் ஆடு தலையாக***
***புலம்பொடு வதியும் நலம்கிளர் அரிவைக்கு"[21]***

*என்ற பாடலடிகள் மூலம் மெழுகு பூசப்பட்ட மேற்கட்டிலின் மேல் கதிரவன் ஆகாயத்தின்1ண் வலிமை வாய்ந்த கொம்புகளைக் கொண்டிருப்பதாகவும், ஆட்டின் பெயருடைய மேச ராசி முதல் ஏனைய 12 ராசிகளும் ஓவியமாக திட்டப்பட்டு இருந்தது. இக்காட்சியின் வாயிலாக கலை என்பது தொழிலை அடிப்படையாகக் கொண்டது என்ற உணர்வுகளை அனைவரும் அறியும் வகையில் செய்வது என்ற நிலையைக் காணமுடிகின்றது. நெடுநல்வாடையில் கட்டிடக்கலை மற்றும் ஓவியக் கலையின் சிறப்புகளை இதன் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.*

**முடிவுரை**

*ஒரு சமுதாயத்தின் பண்பாட்டை, நாகரிகத்தை அறிந்து கொள்ளப் பெரிதும் கலைகள் துணைசெய்கின்றன. வானளாவ உயர்ந்த கட்டிடங்கள், கோட்டை வாயில்கள், ஆழமான அகழிகள், உயர்ந்த மதில்கள், தாழ்போடும்படி வேலைத்திறம் மிக்க கதவுகள், யானைகள் செல்லக்கூடிய அளவிற்கு அகன்ற வாயில்கள் போன்ற அமைப்புடைய கட்டிடங்கள் அமைத்திருந்தனர். கண்ணைக்கவரும் ஓவியக்கலையிலும், வேலைப்பாடுகள் மிக்க நுட்பமான சிற்பக்கலையிலும், தச்சுக்கலையிலும் மக்கள் சிறந்து விளங்கினர் என்பதைக் காண முடிகின்றது. சமுதாய முன்னேற்றம் கருதி புதிய புதிய உத்திமுறைகளைக் கையாண்டு பல்வேறு பொருளாதாரம் சார்ந்த தொழில்கள் மற்றும் தொழில் நுட்ப முறைகள் மிகுந்த வேலைப்பாட்டுடன்*

*நேர்த்தியாக அமைந்திருத்தலைக் காணமுடிகின்றது. பாண்டிமா தேவியின் கட்டிலில் 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழக மக்களின் வாழ்க்கை முறையில் எத்தகைய கலை நுட்பங்கள் பொதிந்து கிடக்கின்றன என்பதும் இன்றும் அவை நம் கலை வல்லுநர்களுக்கு பிரமிப்பை ஏற்படுத்தும் வகையில் திகழ்கிறது என்பதையும் காணமுடிகின்றது. பழந்தமிழ் இலக்கியப் புதையலில் தேடிக் கொண்டு சென்றால் காணக்கிடைக்காத கருத்துக் கருவூலங்கள் தென்படும். அவையாவும் இன்றைய சமுதாய வாழ்க்கையோடு தொடர்பு படுத்திப்பார்க்கும் போது தமிழர்கள் எத்தகைய நுட்பமான தொழில்நுட்பக் கூறுகளை அறிந்து அதன் மூலம் ஆழமான வேலைப்பாடுகளைச் செய்து கலைத்திறனின் வளர்ச்சிக்கு வழிகாட்டியிருக்கின்றனர் என்பதை உணரமுடிகின்றது. நேர்த்தியான முறையில் தொழில்திறம் வளர்த்தகாலம் சங்ககாலம் என்றால் அதுபொருத்தமுடையதாக அமையும். அந்தவகையில் நெடுநல்வாடை சிறப்பிடம் பெற்றுத்திகழ்ந்ததை அறிந்துகொள்ளமுடிகின்றது.*

**சான்றெண் விளக்கம்**

1. *சரஸ்வதி அந்தாதி, கடவுள் வாழ்த்து.*
2. *பத்துப்பாட்டு ஆய்வுக் கோவை, ப. 205.*
3. *தொல்.மரபு. நூ. 46.*
4. *நன்னூல், நூ. 388.*
5. *பத்துப்பாட்டு ஆய்வுக் கோவை, ப. 204.*
6. *தொல்.புறத்திணையியல், நூ. 10.*
7. *நெடுநல்வாடை, பா. 84-88.*
8. *திருக்குறள். 743.*
9. *நெடுநல்வாடை, பா. 108-112.*
10. *இந்திய கோவில் கட்டிடக்கலை வரலாறு, ப. 34.*
11. *நெடுநல்வாடை, பா. 78-80.*
12. *கலித்தொகை, பா. 44.*
13. *நெடுநல்வாடை, பா. 95-97.*
14. *சிலப்பதிகாரம், அந்திமாலைச்சிறப்புச்செய் காதை, 4:5.*
15. *நெடுநல்வாடை, பா. 44.*
16. *மேலது., பா. 108-111.*
17. *மேலது., பா. 112.*
18. *மேலது., பா. 115-119.*
19. *மலைபடுகடாம், பா. 4.*
20. *நெடுநல்வாடை, பா. 110-111.*
21. *மேலது., பா. 159-166.*

**துணைநூற்பட்டியல்**

1. *சுப்பிரமணியன், ச. வே. சங்கஇலக்கியம் பத்துப்பாட்டு நெடுநல்வாடை தெளிவுரை, மெய்யப்பன் பதிப்பகம், 1997.*
2. *இராமூர்த்தி. சரஸ்வதி அந்தாதி, சாரதா பதிப்பகம், 2020.*
3. *இளம்பூரணர். தொல்காப்பியம், சாரதா பதிப்பகம், 2005.*
4. *மாணிக்கம், அ. நன்னூல், பூம்புகார் பதிப்பகம், 1918.*

5. ஜெகதீசன், இரா., முருகேசன், க., கார்த்திகேயன். பத்துப்பாட்டு ஆய்வுக் கோவை, குறிஞ்சி பதிப்பகம்.
6. கல்யாண சுந்தரனார், திரு. வி. திருக்குறள், ஸ்டார் பதிப்பகம், 1942.
7. தர்மராஜ், ஜே. இந்திய கட்டிடக்கலை வரலாறு, டென்சி பப்ளிக்கேஷன்ஸ், 2010.
8. நச்சினார்க்கினியர் (உ.ஆ.), கலித்தொகை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1999.
9. செல்லப்பன், சு. (உ.ஆ.), சிலப்பதிகாரம், பாரதி பதிப்பகம், 1994.
10. சோமசுந்தரனார், பொ. வே. (உ.ஆ.), மலைபடுகடாம், கழக வெளியீடு, 2001.

**References**

1. Subramanian, S. V. *Sangam Literature: Pattuppattu Nedunalvaadai - Detailed Commentary*. Meyyappan Publications, 1997.
2. Ramurthi. *Saraswati Andhadhi*. Saradha Publications, 2020.
3. Ilampuranar. *Tolkappiyam*. Saradha Publications, 2005.
4. Manickam, A. *Nannool*. Poompuhar Publications, 1918.
5. Jegatheesan, R., Murugesan, K., & Karthikeyan. *Pattuppaattu Research Compilation*. Kurinji Publications.
6. Kalyana Sundaranar, T. V. *Thirukkural*. Star Publications, 1942.
7. Dharmaraj, J. *History of Indian Architecture*. Dency Publications, 2010.
8. Naccinarkiniyar (Ed.). *Kalithogai*. South Indian Saiva Siddhanta Book Publishing Society, 1999.
9. Sellappan, S. (Ed.). *Silappathikaram*. Bharathi Publications, 1994.
10. Somasundaranar, P. V. (Ed.). *Malaipadukadam*. Kazhaga Publications, 2001.